Date. 11.06.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

OS.147/2022

**வா.சா. 1**

**பெயர். திருமதி. தேன்மொழி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் தகப்பனார் பெயர் பாண்டுரங்கன் . அவருக்கு இரண்டு மனைவி ஆகும். நான் முதல் மனைவிக்கு பிறந்தவர். அவருக்கு ஜெயலட்சுமி மற்றும் தெய்வானை (1ம் பிரதிவாதி) என்று இரு பிள்ளைகள் உள்ளனர். என்னுடைய தாயாருக்கு பிறந்தவர்கள் மொத்தம் மூன்று பேர். நான் , செல்வி மற்றும் இளங்கோவன் ஆவார்கள். 4 முதல் 6 பிரதிவாதிகள் இரண்டாவது மனைவிக்கு பிறந்தவர்கள் ஆவார்கள். நான் இந்த வழக்கை பாக பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த வருடம் பிறந்தேன் என்று சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. சுமார் 54 வயது இருக்கும். மொத்தம் எத்தனை அயிட்ட சொத்துக்கள் இருந்தது என்றால் 23 அயிட்ட சொத்துக்கள் இருந்தது. இதில் 9 கிரைய பத்திரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் அந்த கிரைய பத்திரங்களை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. ஆவணங்கள் அடிப்படையில் தான் தெரியும். ஒவ்வொரு ஆவணங்களும் எந்த சொத்து சம்மந்தப்பட்டது அதன் சொத்துக்கள் விவரம் எனக்கு தெரியாது. என் அப்பா எப்போது இறந்துவிட்டார் என்றால் 2023 ம்

ஆண்டு இறந்துவிட்டார். நான் மீனாட்சி என்பவரை எதற்காக வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் பூர்வீக சொத்திலிருந்து கிரையம் வாங்கியதால் நான் மீனாட்சியை தரப்பினராக சேர்த்துள்ளேன். மீனாட்சி என்ன சொத்து யாரிடம் எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மீனாட்சி வாங்கிய சொத்து என்ன சொத்து என்று பத்திரத்தில் குறிப்பிடபட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வழக்கில் 7 வது அயிட்டமாக நான் குறிப்பிட்டுள்ள சொத்தின் சர்வே எண். கூற முடியுமா என்றால் கூற முடியும். அந்த சொத்தை 2008 ல் வாங்கினார்கள். அதில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்களை என்னால் சொல்ல முடியாது. 7 வது அயிட்ட சொத்தை இளங்கோவன் தனது சொந்த வருமானத்தை கொண்டு வாங்கி பட்டாவும் அவர் பெயரில் மாறி விட்டது என்றால் என் அப்பா இருக்கும் போதே ஒரு சொத்தை என் அப்பா பெயரில் வாங்கமுடியாது என்பதால் என் சகோதரர் பெயரில் வாங்கினார்கள். நான் இந்த விவரத்தை வழக்கில் கூறியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மீனாட்சி பெயரில் வாங்கிய சொத்து இளங்கோவன் தனக்கு பாத்தியப்பட்ட 7 வது அயிட்ட சொத்தை அரியலூர் இந்தியன் வங்கியில் ரூபாய் 1,50,000 கடன் வாங்கியும் அவரது மனைவி மீனாட்சிக்கு பாத்தியமான நகைகளை தன்னுடைய பெயரில் கண்டமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் அடகு வைத்தும், பத்திரமாக பதிவு செய்து 12/11/2008 ல் இந்த சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த சொத்து பூர்வீக வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.**